சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 19.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 126/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | சரவணன் |
| தந்தை பெயர் | : | கலியபெருமாள் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 52 |

2026 ம் ஆண்டு மே மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் வரதட்சனை தடுப்பு பிரிவில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 04.06.2025 ஆம் தேதி திருவாரூர் மாவட்ட, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியிலிருந்தபோது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல் முறை ஆணை எண் C.No.109/SJ&HR/TVR/2025, Dt: 04.06.2025-ன் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த உத்தரவின் படி நான் இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கு ஆவணங்களை பார்வையிட்டேன், திருமக்கோட்டை காவல் நிலையத்தில் மனு எண்.208/2025-ல் விசாரணைக்கு பின் உதவி ஆய்வாளர் அ.சா-10 திரு. தேவதாஷ் என்பவர் திருமக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.26/2025 என்ற எண்ணில் பதிவு செய்து வைத்திருந்த அ.சா.ஆ-5 ஆன முதல் தகவல் அறிக்கையினை பார்வையிட்டு, பின்னர் 04.06.2025 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு சம்பவ இடமான பைங்காட்டூர் டாஸ்டாக் அருகே சென்று பார்வையிட்டு சாட்சிகள் அ.சா-6 செங்குட்டுவர் மற்றும் அ.சா-7 லெனின் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தாயர் செய்தேன். பின்னர் மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-8** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் சாட்சிகள் அ.சா-2 பாஸ்கர், அ.சா-3 விஜயன், அ.சா-4 ராஜிவ்காந்தி, கருணாகரன், குபேந்திரன் மற்றும் செல்வேந்தின் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர மறுநாள் 05.06.2025 ஆம் தேதி சாட்சிகள் அ.சா-5 மாரிமுத்து மற்றும் கலைச்செல்வன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் உள்ள சட்டப்பிரிவுகளான பா.நி.ச பிரிவுகள் 191(2), 296(b), 115(2) உ/இ ப.சா& ப.ப (வ.கொ.த)

சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) என்பதை பா.நி.ச பிரிவுகள் 296(b), 115(2) உ/இ ப.சா& ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) என சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் வட்டாட்சியர் மன்னார்குடி அவர்களுக்கு அ.சா-1 கஜேந்திரன் மற்றும் எதிரி பிரபு (எ) பிரபாகரன் ஆகியோருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து 10.06.2025 ஆம் தேதி அன்று அ.சா-1 மற்றும் எதிரிக்கு உரிய அ.சா.ஆ-3 மற்றும் அ.சா.ஆ-2 ஆக சாதி சான்றிதழ்களை பெற்றேன். பின்னர் துணை வட்டாட்சியர் அ.சா-8 ராஜேஷ், அ.சா-9 கார்த்திக் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி மதுரை உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று தஞ்சை நீதிமன்றத்தில் ஆஜராகி மனு தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளார் என்பது தெரிய வந்தது. பின்னர் நான் சென்னைக்கு பணி மாறுதல் அடைந்ததால் மன்னார்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் மணிவண்ணன் என்பரிடம் வழக்கு கோப்பினை கொடுத்து சென்றேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் 01.06.2025 என்றுள்ள நிலையில் நான் விசாரணையை 3 நாட்கள் கழித்து 04.06.2025 ஆம் தேதி தான் ஆரம்பித்தேன் என்று சொன்னால் சரிதான். எனது விசாரணையில் அ.சா-1 கஜேந்திரன் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை நேரில் பார்த்தாக யாரையும் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது விசாரணையில் அ.சா-1 கஜேந்திரன் நான்கு நபர்கள் தாக்கியதாக புகார் வாக்குமூலத்தில் மிகை படுத்தி சொல்லிவிட்டேன் என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதன் அடிப்படையிலேயே நான் சட்டப்பிரிவி மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில்

சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் சைக்கிளை கைப்பற்றினேனா என்றால் சைக்கிளை நான் கைப்பற்றவில்லை. எனது விசாரணையின் படி மதுக்கடை என்பது வேறு பில்டிங், மதுகூடம் என்பது வேறு பில்டிங் என்று சொன்னால் தனி கட்டிடம் தான் ஆனால் ஒன்றுக்கொன்று அருகாமையில் உள்ளது. எனது விசாரணையில் சம்பவ இடமாக கூறிப்பிட்டு இருந்தது மதுக்கூடத்தின் வடக்கு புறம் உள்ள தென்னமரம் என்று சொன்னால் தென்னமரம் அருகில் இல்லை பாருக்கு அருகில். இவ்வழக்கில் அ.சா-2 முதல் 4 வரையானவர்கள் ஒரே சமூதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். இவ்வழக்கில் அ.சா-4 ராஜிவ் காந்தி எதிரி அ.சா-1 கஜேந்திரனை பெரிய ஆளா என்று கேட்டதாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் ஆமாம். அ.சா-1 எதிரி மீது முன் விரோதத்தின் காரணமாக கொடுக்கப்பட்ட புகாரை சரிவர விசாரணை செய்யாமல் சம்பவ இடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து வழக்கு ஆவணங்களை தயார் செய்துவிட்டு எதிரிக்கு எதிராக போடப்பட்ட பொய்யான வழக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.19 18:11:57 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.